[28th November 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 15-ந் தேதி மே, 1970 முதல் திறவையாக அனுப்பப்பெறும் தபால்களுக்கு கட்டணம் 15 காசிலிருந்து 20 காசாக தபால் இலாக்காவால் உயர்த்தப்பட்டிருப்பதால் மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து திறவையாக அனுப்பப் பெறும் தபால்களுக்கு 20 காசு அஞ்சல் தலை ஒட்டப்படுகிறது.

(இ) இல்லை. (உ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் கேட்ட கேள்வி இந்த மாறுதலுக்கு முன்பாக இம்மாதிரி அதிகமான காசு பெறுமானமுள்ள அஞ்சல் தலை ஒட்டப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறதா என்பதுதான். எனவே அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்துத்தான் பதில் அளித்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கேள்வியைப் பொறுத்த வரையில், அப்படிக் கேட்கப்பட்டதாக இல்லை. ஆனால் அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டதில், அவர்கள் 18-5-1970 -க்குப் பின்னால்தான் இவ்வாறு ஒட்டப் பெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு முன்னால் இவ்வாறு ஒட்டப்பட்டதாகக் கூறினால், அதுபற்றி விசாரிக்கலாம்.

Bench of the Tamil Nadu High Court at Madurai

*17. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries pleased to state :

(*a*) whether any representations have been received by the Government for the setting up of a Bench of the Tamil Nadu High Court at Madurai ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரையில் உயர்நீதி மன்றக் கிளை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக அரசால் முறையீடுகள் ஏதேனும் பெறப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

THIRU G. VASANTHA PAI : In the event of a Bench of the Tamil Nadu High Court being set up at Madurai, may I ask the Hon. Minister whether, in view of the persistent efforts of the hon. Member Thiru D. Santosham, a statue will be erected for him ? (Laughter)

28th November 1970]

THIRU D. SANTOSHAM: I am sure the advantages of decentralising the High Court will be accepted by all including the hon. Member Thiru G. Vasantha Pai. Apart from vested interests like him opposing it,......

AN HON. MEMBER : He is not opposing. He wants a statue to be erected for the hon. Member.

THIRU D. SANTOSHAM : May I know, whether, apart from such vested interests, there are any other real difficulties in the way ? He wanted a statue to be erected. But I know he has got some definite vested interest and he is not above vested interest. But apart from such vested interests, are there any other difficulties in the way of implementing this demand which is *prima facie* a real advantage to all ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : சில மாநிலங்களில் உயர் நீதிமன்றம் இரண்டு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் நமது மாநிலத்திலும் தென் மாவட்டங்களில் உள்ளவர்கள் சென்னைக்கு வந்து போகிற தொல்லையைத் தவிர்ப்பதற்காகவும், அவர்களுக்கு வசதியாக அமைவதற்காகவும் மதுரையில் உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றினை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கை இருந்து வருகிறது. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்த வரையில் இங்கே இருக்கிற வசதிகள் அங்கே இருக்குமா ? நூலக வசதி அங்கே இருக்குமா ? அதே போல் சிறந்த வழக்கறிஞர்கள்—இப்போது எங்கேயும் இருக்கிறார்கள்—அங்கே இருப்பார்களா என்றெல்லாம் சிந்திக்கிறார்கள். யார் சிறந்த வழக்கறிஞர்கள் என்ற சர்ச்சைக்குள் நான் இப்போது இறங்கத் தயாராயில்லை. அப்படிப்பட்ட ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். அதற்காகத் தான் அரசாங்கம் இது குறித்துப் பரிசீலனை செய்து வருகிறது. முழுமையாக ஒரு நீதி மன்றத்தை அங்கே அமைக்காவிட்டாலும் கூட, ஒரு பகுதியையாவது அங்கே வைக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். நீதிமன்ற நீதிபதிகளில் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு வகையான நீதிபதிகள் இருக்கிறார்கள். ரிட் ஜூரிஸ்டிக்ஷன், ரிட் அப்பீல், செகண்டு அப்பீல், ரிவிஷன், கிரிமினல் அப்பீல்ஸ் என்பவற்றிற்கு என்றிருக்கிறார்கள். இவர்கள் அந்தத் தென் மாவட்டங்களில் உள்ள வழக்குகள் வரும்போது அங்கே போய் வழக்குகளை விசாரிக்க முதலில் ஒரு ''கேம்ப் கோர்ட்டு'' என்ற முறையிலாவது ஏற்பாடு செய்யலாமா என்று யோசித்து வருகிறோம். அதிலே வெற்றி பெற்றுவிட்டால் அதற்குப் பிறகு நிரந்தரமாக தென் மாவட்டங்களுக்கு ஆக ஒரு உயர்நீதிமன்றக் கிளையை அங்கே அமைக்கலாமா என்று ஆராய்ந்து வருகிறோம்.

திரு. டி. சந்தோஷம் : சிறந்த வழக்கறிஞர்கள் மதுரையில் இருப்பார்களா என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வாதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். மதுரையிலிருந்து சென்னைக்கு வழக்

[28th November 1970

கறிஞர்கள் வரும்போது அவர்கள் தான் மிகவும் சிறப்போடு விளங்குகிருர்கள். அதே போல் மதுரைக்குப் பக்கத்தில் இருந்து வந்தவர்கள்தான் சிறந்த அமைச்சர்களாகவும் விளங்குகிருர்கள்— மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உட்பட. எனவே இப்படிப் பட்ட தவருன ஆட்சேபணேயைச் சொன்னுல், அதை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றே நம்புகிறேன். அதை நிராகரித்து இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வேண்டும். உயர் நீதிமன்றத்திற்குத் தேவையான நூலகம் ஒரு பெரிய பிரச்னேயே அல்ல. அவசியமானுல் மதுரைப் பொது மக்களே அதற்கான பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிருர்கள். எனவே இந்தச் சின்னஞ்சிறு இடையூறுகளே யெல்லாம் சமாளித்து, வெகு சீக்கிரத்தில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில், இதுபற்றிக் கொள்கையளவில் எந்தக் கருத்து வேறுபாடுமில்லே. நீதி மன்றம் நம்மோடு ஒத்து வருகிற வகையில் நாம் அதைக் கொண்டுவர வேண்டும். அவர்களே நாம் கட்டாயப் படுத்தக் கூடாதென்றே நினேக்கிருேம். எனவே அவர்களேயே இதுபற்றிப் பரிசீலிக்கும்படி கேட்டிருக்கிருேம். அவர்கள் முடிவுக்கு ஏற்ப செயல்படலாம். தமிழ் நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் எல்லாம் சிறந்த வழக்கறிஞர்கள் என்பதைச் சென்னேயில் உள்ள வழக்கறிஞர்கள் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். மாண் மிகு உறுப்பினர் திரு வசந்த பாய் அவர்கள் மாண்புமிகு உறுப்பி னர் திரு சந்தோஷம் அவர்களுக்குச் சிலே வைக்கச் சொல்லியிருப் பதே இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்று கூற விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு துணேத் தலேவர் அவர்களே, இது வெகு நாட்பட்ட பிரச்னேயாகும். 1950-ஆம் ஆண்டிலே கூட நமது மாநிலச் சட்ட சபையில் இந்தப் பிரச்னே எழுப்பப் பட்டது. அப்போதும் அன்றைக்கிருந்த சட்ட அமைச்சர் அவர்கள் இதே மாதிரிதான் பதில் சொன்னுர். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இது நல்ல திட்டம்தான் என்ருலும், மற்ற விஷயங் களுக்காக யோசிக்க வேண்டியிருக்கிறது என்ருர்கள். அது இன்றைய தினம் வரையில் யோசிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிற ஒன்ருக இருக்கிறது. எனவே இப்போதாவது நீதிமன்ற நீதிபதி களோடு கூடிப்பேசி ஏதாவது ஒரு முடிவுக்கு வருவதற்கு அரசாங் கம் தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் எதிர்க் கட்சியிலிருந்து கேட்டபோதும் இதே மாதிரித் தான் பதில் சொல்லப்பட்டது. ஆனுல் இப்போது இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு தான் எல்லாக் காரியமும் நடைபெற வேண்டும் என்று சித்தம் இருப்பது போல் தோன்றுகிறது. ஆகவே, அரசாங்கம் இதை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.